# இலங்கையில் சுற்றுச்சூழலை அடையாளப்படுத்துவதற்கான தேசிய கட்டமைப்பு

சுற்றாடல் திட்டமிடல் மற்றும் பொருளாதாரப் பிரிவு

சுற்றாடல் அமைச்சு

**உள்ளடக்கம்**


| | | பக்க இலக்கம் |
|---|---|---|
| 1.0 | அறிமுகம் | 01 |
| 2.0 | கட்டமைப்பின் நோக்கங்கள் | 01 |
| 3.0 | கட்டமைப்பின் அமுலாக்கப் பொறிமுறை | 01 |
| 4.0 | கட்டமைப்பின் நிறுவன ரீதியான கட்டமைப்பு | 03 |
| 5.0 | விழிப்புணர்வு உருவாக்கமும் ஆற்றலைக் கட்டியெழுப்புதலும் | 05 |
| 6.0 | கட்டமைப்பை மேம்படுத்தல் | 05 |
| 7.0 | தேசிய சுற்றுச்சூழல் அடையாளப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | 05 |

**சுருக்கப் பதங்கள்**

| | |
|---|---|
| CAA | நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை |
| CCC | இலங்கை வர்த்தக சம்மேளனம் |
| CEA | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| EDB | ஏற்றுமதி அபிவிருத்திச் சபை |
| IDB | கைத்தொழில் அபிவிருத்திச் சபை |
| ISB | கைத்தொழில் சேவைப் பணியகம் |
| ISO | சர்வதேச தரப்படுத்தல் நிறுவனம் |
| LCA | வாழ்க்கை வட்டப் பகுப்பாய்வு |
| MoE | சுற்றாடல் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு |
| MoTc | தொழில்நுட்பவியல் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு |
| MoI | கைத்தொழில் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு |
| MoT | வர்த்தகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு |
| NGOs | சார்பற்ற நிறுவனங்கள் |
| NIPO | தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத் |
| SLAB | இலங்கை தர மதிப்பீட்டுச் சபை |
| SLSEA | இலங்கை நிலைபேற்று வலுசக்தி அதிகாரசபை |
| SLSI | இலங்கை தரக் கட்டளைகள் நிறுவகம் |

# இலங்கையில் சுற்றுச்சூழலை அடையாளப்படுத்துவதற்கான தேசிய கட்டமைப்பு

## 1.0 அறிமுகம்

நுகர்வு மற்றும் உற்பத்திப் பாங்குகளை நிலைத்துநிற்கக்கூடியதாக நிலைமாற்றுவதற்கு சுற்றுச்சூழலை அடையாளப்படுத்தும் திட்டங்கள் உலகளாவிய ரீதியில் பங்களிப்புச் செய்கின்றன. நிலைத்துநிற்கும் நுகர்வு மற்றும் உற்பத்தியின் (SCP) இறுதி நோக்கமான, பொருளாதார வளர்ச்சியினையும் சுற்றாடல் சீர்கேட்டையும் பிரிப்பதற்கு இது உதவுகின்றது.

சுற்றுச்சூழல் அடையாளம் என்பது சுற்றாடல் அடையாளங்களில் ஒரு வகை ஆவதுடன் வாழ்க்கை வட்டக் கரிசனைகளின் அடிப்படையில் உற்பத்திப்பொருட்களினதும் சேவைகளினதும் ஒட்டுமொத்த சுற்றாடல் செயற்றிறன் தொடர்பான செய்தியினை உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் பரிமாறி சுற்றாடல் சிநேகித பூர்வமான உற்பத்திப்பொருட்களை ஊக்குவிப்பதில் பரவலாகப் பயன்படுத்தப்படும் கருவிகளில் ஒன்றாக விளங்குகின்றது. நுகர்வோருக்கு அவர்களின் நுகர்வின் சுற்றாடல் விளைவுகள் பற்றிய கூடுதல் தகவல்களை வழங்குதல், உற்பத்திப்பொருட்களின் / சேவைகளின் சுற்றாடல் நியமங்களை அதிகரிக்கும் பொருட்டு உற்பத்தியாளர்கள், அரசாங்கங்கள் மற்றும் ஏனைய முகவர்களை ஊக்குவித்தல் போன்ற பல்வேறுபட்ட வழிகளில் சுற்றுச்சூழல் அடையாளங்கள் அனுகூலமுடையதாக உள்ளன.

ISO 14000 எனும் தொடர்களில் அடையாளப்படுத்தல் நடைமுறைகளுக்கான நியமங்களை சர்வதேச தரப்படுத்தல் நிறுவனம் (ISO) உருவாக்கியுள்ளது. ISO 14024 (வகை I), ISO 14021 (வகை II) மற்றும் ISO 14025 (வகை III) ஆகிய மூன்று வகையான சுற்றுச்சூழல் அடையாளங்களுக்கான வழிகாட்டலை மூன்று நியமங்கள் வழங்கிவருகின்றன.

இலங்கையில் சுற்றுச்சூழல் அடையாளங்களின் பாவனையானது உள்நாட்டு நுகர்வோருக்கிடையில் அதிகம் பிரபல்யமன்று. கிடைக்கத்தக்க சுற்றாடல் அடையாளங்களும் சர்வதேச சுற்றுச்சூழல் அடையாளங்களும் சர்வதேச வர்த்தகத்துடன் ஒப்பிடுகையில் உள்நாட்டு நுகர்வு மற்றும் உற்பத்திப் பாங்குகள் மீது கருத்திற்கொள்ளத்தக்க அளவிற்கு தாக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை.

சுற்றாடல் அமைச்சானது (MoE) இலங்கை தர மதிப்பீட்டுச் சபை (SLAB), இலங்கை தரக் கட்டளை நிறுவகம் (SLSI) மற்றும் அப்போதய விஞ்ஞான, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சு உள்ளடங்கலாக பிரதான அக்கறைதாரர்களுடன் இணைந்து சுற்றுச்சூழல் அடையாளப்படுத்தல் கட்டமைப்பொன்றை விருத்திசெய்ய ஆரம்பித்துள்ளது.

## 2.0 கட்டமைப்பின் நோக்கங்கள்

அ. பசுமை உற்பத்திக்கு உற்பத்தியாளர்களையும் பொறுப்பான நுகர்வுப் பாங்கினை நோக்கி நுகர்வோரையும் ஊக்குவிக்கும் சுற்றுச்சூழல் அடையாளப்படுத்தல் திட்டங்களுக்கு முழுமையான அரசாங்க ஆதரவினை வழங்குதல்.

ஆ. சுற்றாடல் சார்ந்த உற்பத்திப்பொருள் நியமங்களை மேம்படுத்தும் பொருட்டு பசுமை உற்பத்தியாளர்களை ஊக்குவித்து வசதிப்படுத்தி, நம்பகரமான சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுற்றாடல் சார்ந்த சான்றுப்படுத்துகை மற்றும் சுற்றுச்சூழல் அடையாளப்படுத்தல் முறைமை மற்றும் நியமங்களை இலங்கையில் மேம்படுத்தல்.

இ. கணிசமானளவு சுற்றுச்சூழல் உற்பத்திப்பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியை உறுதிப்படுத்தி உற்பத்திப்பொருட்களினதும் சேவைகளினதும் தவறான பசுமை நடைமுறையினை (green washing) இழிவளவாக்குதல்.


## 3.0 கட்டமைப்பின் அமுலாக்கப் பொறிமுறை

**ஆரம்பக் கட்டம்:**

உள்நாட்டு ரீதியில் செயற்படும் சர்வதேச திட்டங்கள் மற்றும் அபிவிருத்தியின் கீழான திட்டங்கள்; உள்நாட்டு ரீதியில் விருத்திசெய்யப்பட்ட (தர மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் தர மதிப்பீடு செய்யப்படாத) உற்பத்திப்பொருட்கள் மற்றும் செய்முறை அடிப்படையிலான சுற்றாடல் உரிமைக்கோரிக்கைகள் அனைத்தும் தொடர்புபட்ட தகவல்களுடன் சேகரிக்கப்பட்டு அமுலாக்க முகவராண்மையுடன் (IA-MoE) இணைந்து பன்முக அக்கறைதாரர் தொழில்நுட்பக் குழுவினால் (MSTC) பகுப்பாய்வு செய்யப்படும். தேசிய சான்றுப்படுத்துகைத் திட்டங்களின் நோக்கெல்லையும் வகுதிகளின் எல்லைகளும் பகுப்பாய்விற்கூடாக நிர்ணயிக்கப்படும். சர்வதேச

சுற்றாடல் உரிமைக்கோரிக்கைகளின் வரைவிலக்கணங்களுக்கு ஒத்திசைவாக உள்நாட்டுச் சுற்றுச்சூழல் அடையாளப்படுத்தல் திட்டங்களுக்கான வரைவிலக்கணமொன்று விருத்திசெய்யப்படும். வரைவிலக்கணமானது பன்முக அக்கறைதாரர் தொழில்நுட்பக் குழுவினால் (MSTC) விருத்திசெய்யப்பட்டு தேசிய வழிப்படுத்தல் குழுவினால் (NSC) அங்கீகரிக்கப்படும்.

## அமுலாக்கக் கட்டம்:




**கட்டமைப்பின் அமுலாக்கப் பொறிமுறை**

1. **அடையாளப்படுத்தல் மற்றும் சான்றுப்படுத்துகைத் திட்டங்களின் வகைப்படுத்தலுக்கான தகுதிவிதிகளை உருவாக்குதல் (கட்டமைப்புத் தகுதிவிதிகள்):** நடைமுறையிலுள்ள மற்றும் தோற்றம்பெற்றுவரும் சுற்றாடல் அடையாளப்படுத்தல் திட்டங்களை வகுதிகளாக வகைப்படுத்தி அவற்றை அங்கீகரிக்கும் பொருட்டு தகுதிவிதிகள் விருத்திசெய்யப்படும். பன்முக அக்கறைதாரர் தொழில்நுட்பக் குழுவினால் (MSTC) தகுதிவிதிகள் விருத்திசெய்யப்பட்டு, தேசிய வழிப்படுத்தல் குழுவினால் (NSC) அங்கீகரிக்கப்படும் என்பதுடன் காலக்கிரமத்தில் திருத்தப்படும்/ தரமுயர்த்தப்படும். தவறான பசுமை நடைமுறையினை (green washing) இழிவளவாக்குதலானது தகுதிவிதிகள் மூலம் உறுதிப்படுத்தப்படும்.
2. **கட்டமைப்பு அங்கீகாரத்திற்கான நடைமுறையொன்றை விருத்திசெய்தல்:** தகைமைவாய்ந்த திட்டங்களை MSTC இனால் அங்கீகரிக்கும் பொருட்டு பொறிமுறையொன்று விருத்திசெய்யப்படும்.
3. **சுற்றுச்சூழல் அடையாளப்படுத்தல் மற்றும் சான்றுப்படுத்துகைத் திட்டங்கள் மற்றும் வகைப்படுத்தலை மதிப்பிடுதல்:** மேற்போந்த தகுதிவிதிகள் மற்றும் அங்கீகாரத்திற்கான

பொறிமுறை என்பவற்றின் அடிப்படையில், நடைமுறையிலுள்ள மற்றும் தோற்றம்பெற்றுவரும் திட்டங்கள் மதிப்பிடப்பட்டு வகைப்படுத்தப்படும். தர மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் தர மதிப்பீடு செய்யப்படாத சான்றுப்படுத்துகை அமைப்புகளுக்கு (CBs) / திட்ட உரிமையாளர்களுக்கு (SOs) இக்கட்டமைப்பினால் கோரப்படும் தேவையான தகவல்களைக் கொண்டு அங்கீகாரத்திற்காக விண்ணப்பிக்க வேண்டியுள்ளது. சான்றுப்படுத்துகை அமைப்புகளின் (CBs) / திட்ட உரிமையாளர்களின் (SOs) விண்ணப்பங்களானவை IA-MoE இனால் பெற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் மதிப்பீட்டு மற்றும் கண்காணிப்புக் குழுவினால் (EMC) மதிப்பிடப்படும்.


4. **பரிந்துரை:** மதிப்பீட்டு மற்றும் கண்காணிப்புக் குழுவானது (EMC) தகைமைவாய்ந்த திட்டங்களையும் உரிய வகுதியினையும் IA-MoE இற்கு பரிந்துரைக்கும்.

5. **அங்கீகாரம் வழங்குதல்:** IA-MoE ஆனது மதிப்பீட்டு மற்றும் கண்காணிப்புக் குழுவின் (EMC) பரிந்துரையின் அடிப்படையில் தகைமைவாய்ந்த திட்டங்களுக்கான அங்கீகாரத்தினை வழங்கும் அல்லது நிராகரிக்கும். நிராகரிப்பின், CBs/SOs இனால் அங்கீகாரத்தின் பொருட்டு MSTC இற்கு மேன்முறையீடு செய்ய முடியும்.

6. **பதிவுசெய்தல்:** அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களானவை இக்கட்டமைப்பின் கீழ் IA-MoE இனால் பதிவுசெய்யப்படும். பதிவுசெய்யப்பட்ட திட்டங்களானவை சுற்றுச்சூழல் அடையாளப்படுத்தப்பட்ட உற்பத்திப்பொருட்களுக்கான விவரக்கொத்து, இணையத்தளங்கள் வாயிலாகவும் பல்வேறுபட்ட வழிமுறைகளுக்கூடாகவும் ஊக்குவிக்கப்படும்.

7. **திட்டங்களை நெருக்கமாக அவதானித்தலும் கண்காணித்தலும்:** அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களானவை வருடாந்தம் EMC இனால் கண்காணிக்கப்படும். EMC ஆனது பரிந்துரைகள் மற்றும் பின்னூட்டத்துடன் சேர்த்து IA-MoE இற்கு அறிக்கைகளை சமர்ப்பிக்கும். ஏதேனும் CB/SO இனால் இத்தேவைப்பாடுகள் மீறப்படும் பட்சத்தில், EMC ஆனது அங்கீகாரத்தினை இரத்துச்செய்யுமாறு தமது பரிந்துரைகளை IA-MoE இற்கு சமர்ப்பிக்கும்.

## 4.0 கட்டமைப்பின் நிறுவன ரீதியான கட்டமைப்பு




**நிறுவன ரீதியான கட்டமைப்பு**

### 1. தேசிய வழிப்படுத்தல் குழு (NSC):

உரிய அமைச்சுகள் (MoTc, MoT, MoI) மற்றும் நிறுவனங்களிலிருந்தான சிரேட்ட அதிகாரிகளை உள்ளடக்கும் ஆட்சிக் குழுவே NSC ஆகும்.

**வகிபாகமும் தொழிற்பாடுகளும்:**

1. மேற்கொள்ளப்படும் ஏதேனும் தொழில்முயற்சிகள் அல்லது முன்னெடுப்புகளுக்கான பிரதான ஆட்சிக் குழுவாக சேவையாற்றுதல்.
2. MSTC மற்றும் EMC என்பவற்றைத் தாபித்தல்.

3. இக்கட்டமைப்பின் ஏதேனும் குழுவிற்கு அல்லது செயற்பாடுகளுக்கு நிபுணத்துவத்தை தெரிவுசெய்தல்.
4. இக்கட்டமைப்பின் முழுச் செய்முறையையும் மேற்பார்வை செய்தல், வழிப்படுத்தல் மற்றும் கண்காணித்தல்.
5. தரப்படுத்தல், சோதித்தல் மற்றும் தர மதிப்பீடு செய்தல் போன்றவற்றுக்கான நிறுவனங்களை வலுப்படுத்தல்.
6. திட்டங்களையும் கட்டமைப்பையும் மேம்படுத்துவதில் IA-MOE இற்கு வசதியளித்தல்.
7. இக்கட்டமைப்பின் எந்தவொரு கட்டத்திலும் (ஆரம்பம் / அமுலாக்கம்) MSTC இனதும் EMC இனதும் ஏதேனும் பிரச்சினைகளைத் தீர்த்தல்.
8. தகவல் பரிமாற்றம், ஆற்றலைக் கட்டியெழுப்புதல் மற்றும் விழிப்புணர்வு உருவாக்கம் சார்பில் IA-MoE /MSTC இற்கான வழிகாட்டலை வழங்குதல்.
9. முன்னேற்றம் பற்றிய ஆதரவு, வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையினை வழங்குதல்.

அ. **அமுலாக்க முகவராண்மை (IA-MoE):** MoE ஆனது இக்கட்டமைப்பின் அமுலாக்க முகவராண்மையாக விளங்கும் என்பதுடன் NSC உடன் இணைந்து அமுலாக்கத்தை வழிநடத்தும். இது பிரதானமாக, இக்கட்டமைப்பின் தகுதிவிதிகளை விருத்திசெய்தல் மற்றும் இற்றைப்படுத்தல், சுற்றுச்சூழல் அடையாளப்படுத்தப்பட்ட உற்பத்திப்பொருட்களுக்கான விவரக்கொத்தில் தகைமைவாய்ந்த திட்டங்களைப் பதிவுசெய்தல், திட்டங்களையும் கட்டமைப்பையும் மேம்படுத்தல், தகவல்களைப் பரிமாறுதல், ஆற்றலைக் கட்டியெழுப்புதல், விழிப்புணர்வை உருவாக்குதல், பின்னூட்டம் வழங்குதல் மற்றும் தேவைப்படும் போது இக்கட்டமைப்பை தரமுயர்த்துவதற்கென NSC இற்கு பரிந்துரைகளைச் செய்தல் என்பவற்றுக்கு பொறுப்புடையதாக இருக்கும். சுற்றாடல் திட்டமிடல் மற்றும் பொருளாதாரப் பிரிவானது இக்கட்டமைப்பிற்கான செயலகமாக செயற்படும்.

ஆ. **ஒழுங்குறுத்துகை முகவராண்மைகள்:** நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை (CAA), மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA), இலங்கை நிலைபேற்று வலுசக்தி அதிகாரசபை (SLSEA), ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB), தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத் (NIPO), இலங்கைச் சுங்கம் போன்ற நடைமுறையிலுள்ள ஒழுங்குறுத்தல் நிறுவனங்களுக்கு தவறான பசுமை நடைமுறையினை (green washing) தடுப்பதற்கான ஒழுங்குறுத்தல் தத்துவம் அளிக்கப்படும். அத்துடன் இது தரப்படுத்தலை வலுப்படுத்தும் என்பதுடன் தரப்படுத்தலுடன் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டங்கள் போன்ற அமுலிலுள்ள ஒழுங்குறுத்தல் கருவிகளில் தேவையான திருத்தங்களைச் செய்யும்.

இ. **சுற்றுச்சூழல் அடையாள நிபுணர் மன்றம்:** நியமங்கள், சான்றுப்படுத்துகை, LCA, ISO, சோதித்தல், கணக்காய்வு, சில்லறை வணிகர் மற்றும் நுகர்வோர் அமைப்புகள் போன்ற துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தனியார் துறை, அரச துறை, அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs), கல்விச் சமூகம் என்பவற்றிலிருந்தான நிபுணர்களையும் தனியாட்களையும் அத்துடன் பிரதிநிதிகளையும் கொண்ட தன்னார்வக் குழுவொன்றே இதுவாகும். தொழில்நுட்ப விடயங்களையும் உரிய துறைகள் மீது இக்கட்டமைப்பின் சாதகமான மற்றும் பாதகமான தாக்கங்களையும் பற்றிக் கலந்துரையாடுவதற்கும், விழிப்புணர்வை உருவாக்குவதற்கும், அனுபவத்தைப் பகிர்ந்துகொள்வதற்கும், உரிய பரிந்துரைகளையும் ஆலோசனைகளையும் மேற்கொள்வதற்கும், அத்துடன் மேம்பாட்டிற்கு ஆதரவளிப்பதற்குமென அவர்கள் காலக்கிரமத்தில் சந்திப்பினை மேற்கொள்கின்றனர்.

## 2. பன்முக அக்கறைதாரர் தொழில்நுட்பக் குழு (MSTC):

**உள்ளடக்கக் கட்டமைப்பு:** SLSI, SLAB, NSC இன் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs), கல்விச் சமூகம் மற்றும் அரச துறையிலிருந்தான துறைக்குரிய திட்டவட்டமான அக்கறைதாரர்கள் உள்ளடங்கலாக கட்டாயமான அக்கறைதாரர்களையும், ஒழுங்குறுத்துகை நிறுவனங்களையும் (CEA, CAA, EDB, SLSEA, NIPO, இலங்கைச் சுங்கம் போன்றவை), கைத்தொழில் மதியுரை நிறுவனங்களையும் (இலங்கை வர்த்தக சம்மேளனம்(CCC), கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) , கைத்தொழில் சேவைப் பணியகம் (ISB) போன்றவை ) மற்றும் உற்பத்திப்பொருள் வகுதிகள் மற்றும் சேவைகளின் அடிப்படையில் தனியார் துறை பிரதிநிதிகளையும் இக்குழு உள்ளடக்கும்.

MSTC ஆனது NSC இனால் தாபிக்கப்பட்டு கண்காணிக்கப்படும். இக்கட்டமைப்பின் தொழில்நுட்ப/ பணிக் குழுவாக இது தொழிற்படும்.

**வகிபாகமும் தொழிற்பாடுகளும்:**

1. நடைமுறையிலுள்ள சுற்றாடல் உரிமைக்கோரிக்கைகளை மதிப்பிடுதல், வகைப்படுத்தலுக்கான தகுதிவிதிகளை உருவாக்குதல்.

2. தேசிய சுற்றுச்சூழல் அடையாளப்படுத்தல் திட்டங்களுக்கான உள்நாட்டு வரைவிலக்கணமொன்றை விருத்திசெய்தல்.
3. திட்ட அங்கீகாரம் மற்றும் மேன்முறையீட்டுக்கான தகுதிவிதிகளையும் நடைமுறைகளையும் விருத்திசெய்தல்.
4. மேன்முறையீடு செய்யப்பட்ட CBs/SOs இன் விண்ணப்பங்களை மதிப்பிடுதல்.
5. இக்கட்டமைப்பை தரமுயர்த்தும் பொருட்டு NSC இற்கு ஆலோசனைகளை மேற்கொள்தலும் பின்னூட்டத்தை வழங்குதலும்.
6. ஒழுங்குறுத்துகை முகவராண்மைகளுக்கான சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகை திருத்தங்களை NSC இற்கூடாகப் பரிந்துரைத்தல்.
7. தேவைப்படும் போது EMC இனால் செய்யப்பட்ட பரிந்துரைகளின் பேரில் தீர்மானங்களை எடுத்தல் (உதாரணம்: திட்டங்களின் தகைமைகள் தெளிவற்றதாக உள்ள போது).
8. கட்டமைப்புத் தகுதிவிதிகளை காலக்கிரமத்தில் திருத்துவதற்கான ஆலோசனைகளை மேற்கொள்தல்.

**3. மதிப்பீட்டு மற்றும் கண்காணிப்புக் குழு (EMC):**

**உள்ளடக்கக் கட்டமைப்பு:** பன்முக அக்கறைதாரர் தொழில்நுட்பக் குழுவில் (MSTC) உள்ள நடுநிலையான நிபுணர்களையும் இத்துறைகளிலுள்ள ஏனைய தகைமைவாய்ந்த நிபுணர்களையும் கொண்ட துணைக் குழுவொன்றாக இது அமையும். தேவையான போது, மதிப்பிடப்பட வேண்டிய துறைகளின் அடிப்படையில் தற்காலிகப் பங்குபற்றுநர்கள் நியமிக்கப்படுவர்.

**வகிபாகமும் தொழிற்பாடுகளும்:**

1. CBs/SOs இலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களை மதிப்பிடுதல்.
2. திட்டங்களை வகைப்படுத்தல் மற்றும் அங்கீகரித்தலுக்காக IA-MoE இற்குப் பரிந்துரைகளைச் செய்தல்.
3. வழிகாட்டல்களை மீறும் திட்டங்களை இரத்துச்செய்வதற்காக பரிந்துரைகளைச் செய்தல்.
4. தேவையான போது, பரிசோதனைக் குழுவொன்றை நியமித்தல் மற்றும் பதிவுசெய்யப்பட்ட திட்டங்களை வருடந்தோறும் கண்காணித்தல்.
5. பின்னூட்டம் மற்றும் பரிந்துரைகளுடன் சேர்த்து IA-MoE இற்கு மதிப்பீட்டினை அறிக்கையிடுதல்.
6. கட்டமைப்பையும் தகுதிவிதிகளையும் தரமுயர்த்தும் பொருட்டு NSC இற்குப் பரிந்துரைகளைச் செய்தல்.

பரிசோதனைக் குழுவானது நிரந்தரக் குழுவொன்றாக இல்லாதிருக்கலாம் என்பதுடன் அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தின் அடிப்படையில் EMC இனால் விடயத்திற்கு விடயம் நடுநிலையாக தெரிவுசெய்யப்படலாம். பயிற்றப்பட்ட, தகைமைவாய்ந்த, அனுபவங்கொண்ட மற்றும் சுயாதீனமான கணக்காய்வாளர்கள் (விசேடமாக ISO நியமங்களின்படி) இக்குழுவின் உறுப்பினர்களாகவிருப்பர். பதிவுசெய்யப்பட்ட திட்டங்களை வருடந்தோறும் கண்காணித்தல், செயற்றிறன்கள் தொடர்பில் EMC இற்கு அறிக்கைகளையும் பரிந்துரைகளையும் சமர்ப்பித்தல் என்பன இக்குழுவின் பிரதான வகிபாகங்களாக இருக்கும்.

**5.0 விழிப்புணர்வு உருவாக்கமும் ஆற்றலைக் கட்டியெழுப்புதலும்:** விழிப்புணர்வு உருவாக்கமும் ஆற்றலைக் கட்டியெழுப்புதலுமானது இக்கட்டமைப்பு அமுலாக்கத்திற்கு இன்றியமையாதது. நிறுவன மட்டத்திலும் கட்டமைப்பு மட்டத்திலும் இதனைச் செய்ய முடியும். ஆற்றலைக் கட்டியெழுப்புதலும் விழிப்புணர்வு உருவாக்கத்திற்குமான பொறிமுறையொன்று NSC இன் அங்கீகாரத்துடன் IA-MoE இனால் விருத்திசெய்யப்படும். சமூக ஊடகங்கள், பத்திரிகை, தொலைக்காட்சி, அரசாங்கப் பெறுகை, சுற்றுச்சூழல் உற்பத்திப்பொருள் கண்காட்சிகள், வர்த்தக கண்காட்சிகள் மற்றும் விருதுகள் போன்ற பல்வேறுபட்ட வழிமுறைகளுக்கூடாக சுற்றுச்சூழல் அடையாளமிடப்பட்ட உற்பத்திப்பொருட்களைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கி அதிகரித்தல் அவசியமாகும்.

**6.0 கட்டமைப்பை மேம்படுத்தல்:** சுற்றுச்சூழல் அடையாளங்களானவை தன்னார்வ முன்னெடுப்பாக உள்ளதனாலும் கவர்ச்சிகரமாக வைத்திருப்பதற்கு உற்பத்தியாளர்களினதும் வாடிக்கையாளர்களினதும் விழிப்புணர்வு அவற்றுக்குத் தேவைப்படுவதனாலும் சுற்றுச்சூழல் அடையாளப்படுத்தல் திட்டங்களினதும் கட்டமைப்பினதும் மேம்பாடானது அத்தியாவசியமாகும். இக்கட்டமைப்பையும் பதிவுசெய்யப்பட்ட திட்டங்களையும் மேம்படுத்துவதற்கு ஒரு பொறிமுறையும் திட்டமும் இருத்தல் வேண்டும். அரசாங்க மற்றும் தனியார் துறைப் பங்குடமையானது இம்மேம்பாட்டிற்குப் பயனுள்ளதாக அமையும். NSC, ஒழுங்குறுத்துகை முகவராண்மைகள் மற்றும் IA-MoE என்பன கட்டமைப்பு மேம்பாடுகளில் சம்பந்தமுறும்.

**7.0 தேசிய சுற்றுச்சூழல் அடையாளப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்:** அமுலாக்கத்தின் போது இனங்காணப்பட்ட இடைவெளிகளையும் தேவைகளையும் கருத்திற்கொண்டு குறைந்தபட்சக் கட்டமைப்புத் தகுதிவிதிகளின் அடிப்படையில் தேசிய சுற்றுச்சூழல் அடையாளப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமொன்று தாபிக்கப்படும்.